தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

## 13 வயதுப்பிரிவு

(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

### மாவீரர் கனவை நனவாக்குவோம்

தமிழீழ மண்ணை மீட்கப் புலிக்கொடி ஏந்தி, புதுவீரம் நிலைநாட்டி, தமிழர் வீரத்தை எமது சந்ததியினருக்கு மீளவும் காட்டி, தொடர் வெற்றிகள் பலவற்றுக்கு உரமூட்டி, தமிழரது உரிமைப்போரிலே ஆகுதியாகி, தமிழினத்தின் தன்னிகரற்ற அடையாளமாக விளங்கும் வரலாற்று நாயகர்கள் எங்கள் மாவீரர்கள். தங்கள் கடைசித்துளி குருதி இருக்கும் வரை உறுதி தளராது இனத்துக்காய் போராடியவர்கள்.

கொள்கையில் உறுதியும் தூரநோக்கும் தன்னலங்கருதாத இனப்பற்றும் மிக்க தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர்கள் எங்கள் மாவீரர்கள். அவர்களின் கனவு உன்னதமானது! உயிர்ப்பானது! நனவாகக் கூடியது!

‘உலகிலேயே உயர்ந்த நாடாகக் கட்டியெழுப்பப்படுகின்ற தமிழீழம்! தன்னம்பிக்கையும் ஒற்றுமையும் கண்ணியமும் உயர் தொழில்நுட்பமும் தன்னிறைவும் கொண்டு வளமாய், மகிழ்வாய், சுதந்திரமாய், பாதுகாப்பாய் தமது சொந்த நிலத்தில் தம்மைத்தாமே ஆளுகின்ற உரிமையோடு வாழும் தமிழினம்!’ இதுவே மாவீரர்கள் கண்ட கனவு! அந்தக் கனவை நனவாக்க வேண்டிய பொறுப்பு இன்று எம் கைகளில் உள்ளது.

நாங்கள் தமிழீழ நிகழ் அரசைத் தனியரசாக மீண்டும் நிலைநிறுத்த வேண்டும். தமிழினம் தன் தாய்நாட்டில் தன்னாட்சி நடாத்த வேண்டும். பன்னாட்டு மன்றங்களிலே தமிழீழத் தாய்நாடு உறுப்புரிமை பெற வேண்டும். தமிழீழத் தேசியக்கொடியுடன் எங்கள் தலைமுறைகள் தமிழீழத் தாய்நாட்டை அடையாளப்படுத்த வேண்டும். இத்தனையையும் நிகழ்த்தக்கூடிய அத்தனை தகைமைகளையும் கொண்டிருப்பவர்கள் நாங்கள்!

தொன்மைச் சிறப்பும் வரலாற்றுத் தொடர்ச்சியும் பண்பாட்டு மேன்மையும் அறிவும் அறமும் கொண்ட பேரினங்களுள் நாமே மூத்தவர்கள்! நாம் அழிக்கப்படுவதற்கும் எம்மினம் ஏதிலியாக்கப்படுவதற்கும் அடிப்படையும் இதுதான் என்ற உண்மையை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் மாணவர்களாக இன்று செய்ய வேண்டிய கடமை என்ன? நன்றாகக் கல்வி கற்போம். நமது மொழியை நேசிப்போம். உலகின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நல்ல குடிமக்களாகவும் பொறுப்புள்ள தமிழர்களாகவும் உயர்வோம். எமது வரலாறுகளை ஆழமாகக் கற்று எங்கள் இனத்தின் வாழ்வுக்காய், தமிழீழ மண்ணின் விடிவுக்காய் உழைப்போம் என உறுதியெடுப்போம். மாவீரர்களின் ஈகங்களை என்றும் நினைவில் கொள்வோம். மாவீரர் கனவுகளை நனவாக்குவதற்கான வழிகளை கண்டறிந்து தடம் மாறாது பயணிப்போம்.

இனமான மறவெரென, தன்மானத் தமிழரென எல்லோரும் எழுந்து நின்றால் இலக்கை அடையும் காலம் தூரமில்லை. நம்பிக்கை இருக்கின்றது. எம் காலத்தில் தமிழினம் விடுதலை பெறும். தமிழருக்கென்று தனிநாடு வரும். எமது தலைமுறை அந்த வெற்றியை நிலைநாட்டும்! மாவீரர் தியாகங்கள் அதற்கு வழிகாட்டும்!

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”